[19th November 1963

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், சாமல்பட்டிக்கு அருகாமை யில் சிமெண்டுத் தொழிற்சாலை வைக்காவிட்டாலும் நமக்கு இருக்கும் சிமெண்டு பற்றாக்குறையை உத்தேசித்து சிமெண்டு பாக்டரிகளை அதிகரிக்க என்ன உத்தேசம் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் 16 லட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்கிறோம். சென்ற மாதம் புதிதாக உற்பத்திக்கு வந்த சங்கரிதுர்கம் தொழிற்சாலையையும் சேர்த்தால் 16½ லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம். விஸ்தரிப்புத் திட்டங்களிலே கரூரில் 5 டன் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றும், ராமேஸ்வரத்தில் நாள் ஒன்றுக்கு 400 முதல் 600 வரை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையும் விஸ்தரிக்க இருக்கிறோம். இதைத்தவிர ராஜ்ய சர்க்கார் சுண்ணாம்புக்கற்கள் எங்கு எவ்வளவு கிடைக்கிறது என்று பரிசிலனை செய்கிறோம். அந்த பரிசிலனை முடிவு அடைந்த பிறகு புது தொழிற்சாலை வைப்பது பற்றி யோசிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அரசாங்கத்தின் தேவையை பூர்த்தி செய்ய அரசாங்கமே சிமெண்டுத் தொழிற்சாலையை ஆரம் பிப்பதாக உத்தேசம் என்று முன்பு சொன்னார்களே, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த உத்தேசம் இப் பொழுதும் இருக்கிறது. ஆனால், போதுமான அளவு லைம் ஸ்டோன் கிடைத்தால்தான் வைக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது.

கம்பளி உற்பத்தி (உதகை)

* 270 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கெட்டிக் கம்பளி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை உதகமண்டலத்தில் நிறுவும் உத்தேசமுண்டா?

(இ) ஆமென்றால், எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No

(b) Does not arise.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தலைவர் அவர்களே, இப்பொழுது நீலகிரியில் உள்ள செம்மறியாட்டு மயிரை பங்களூரில் கொண்டு போய் அதை கம்பளியாக நெய்து மறுபடியும் ஊட்டியிலேயே நல்ல விலைக்கு விற்கிறார்கள். ஆகவே, தொழிற் துறையில் பிற் போக்காக உள்ள எங்கள் மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலையை எப்படியாவது ஏற்படுத்த வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இது கேள்வியா?

19th November 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படி ஒரு தொழிற்சாலை வைக்க யாராவது முன்வந்தால் சர்க்கார் வேண்டிய உதவி செய்யும்.

தொழிற்கல்லூரிகள்

*271 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(a) எஞ்சினீரிங் டிப்ளமா வைத்திருப்பவர்கள் இரண்டாண்டிற்கு எஞ்சினீரிங் கல்லூரிகளில் ஓய்வு நேரத்தில் படித்த பிறகு அவர்களை B.E. பரிட்சைக்கு அனுமதிக்கும் யோசனை அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா ?

(b) ஆம் எனில், அத் திட்டம் எப்போது அமுல் நடத்தப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Government have constituted a committee to draw up a detailed scheme for conducting separate part-time classes in Engineering Colleges for the benefit of diploma holders of Industry with a view to enable them to appear for the final B.E. degree examination. The Committee's report is awaited. The University's concurrence would also be necessary before the scheme can be implemented.

*272 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எஞ்சினீரிங், மருத்துவப் படிப்பிற்காக, பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு படிப்பின் காலத்தைக் குறைத்து பயிற்சியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதா ?

(இ) அத்தகைய பயிற்சி இடங்கள் ஒவ்வொரு துறையிலும் எத்தனை ?

(உ) எவ்வளவு காலப் பயிற்சி பெறவேண்டும் ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்:

(அ) எஞ்சினீயரிங் படிப்பில் மாத்திரம் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சி காலம் குறைக்கப்பட்டிருக்கிறது.

(இ) —

	சிவில்.	மெக்கானிகல்.	எலக்டிரிகல்.	டெலிகம்யூனிகேஷன்.
(1) கிண்டி பொறியியல் கல்லூரி, சென்னை.	20	20	20	20
(2) அரசினர் பொறியியல் கல்லூரி, கோயம்பத்தூர்.	20	20	..	..
(3) பி. எஸ் ஜி. பொறியியல் கல்லூரி.	..	20	20	..
		மொத்தம்	..	160

(உ) மூன்றாண்டுகள்.